JUN 1971 ... LIBRARY

# குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க 'தலைவர்'களுக்கு சந்தர்ப்பம்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU

Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 119

யாழ்ப்பாணம் வைகாசி 28 சபிஆதி 17 வெள்ளிக்கிழமை (11-6-71)

## நீதி அமைச்சர் தகவல்

கோட்டை, வியாழன்

தம் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கப் பயங்கரவாதிகள் தலைவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இந்தத் தகவலை செனட் சபையில் நீதியமைச்சர் செனட்டர் திரு. ஜெயமானே தெரிவித்தார்.

குற்றவாளிகள் ஆலோசனைச் சபை ஒன்றின் முன் இவர்கள் தம் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்க இடமளிக்கப்படும் என்று நீதியமைச்சர் கூறினார்.

விசாரணைகளைப் பின்போடுமாறு பயங்கரவாதிகள் தலைவர்கள் ஆலோசனைச் சபையிடம் கேட்கும்பட்சத்தில் விசாரணைகள் பின்போடப்படுமென்று நீதியமைச்சர் சொன்னார்.

செனட்டர் திரு. சி. குமாரசூரியர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் 6,200 பட்டதாரிகளுக்கு இதுவரை மக்கள் அரசாங்கம் வேலை வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

# 'இந்த ஆட்சிக்காலத்துக்குள் தமிழினத்தைச் சூழ்ந்துள்ள பயம் நீங்கிவிடும்'

## அரசியல் நிர்ணயசபையில் டாக்டர் கொல்வின்

கொழும்பு, வியாழன்

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவதற்குள் தமிழ்பேசும் இனத்தைச் சூழ்ந்துள்ள ஒருவித பயம் முற்றாக நீங்கிவிடும் என்று உறுதியாகவும் திடமாகவும் நம்புவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று கூறினார்.

அரசியல் நிர்ணயசபைக் கட்டடத்தில் பேசுகையிலேயே இப்படி அவர்சொன்னார். புதிய அரசியலமைப்புக்கான ஐந்தாவது அடிப்படைத் தீர்மானம் மீதான விவாதத்துக்குப் பதிலளித்து அவர் பேசினார்.

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இப்போதுள்ள பயம் இந்த ஆட்சிக்காலம் முடிவதற்குள் அறவே ஒழியும்போது தமிழரசுக்கட்சி தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது தமிழ் பேசும் மக்கள் தமக்கு அரசியலை வழிகாட்ட வேறு இடத்தை நோக்குவார்கள் என்று டாக்டர் கொல்வின் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இப்போதும், இதற்கு

(6ம் பக்கம் பார்க்க)

## மூன்றுநாட்களிலும் 260 பேர் சரண்

கோட்டை, வியாழன்

பயங்கரவாதிகள் சரண் அடைவதற்காக வழங்கப்பட்ட மூன்று நாள் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. இந்த மூன்று நாட்களிலும் சுமார் 260 பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளதாகப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

சரணடைவதற்காக வழங்கப்பட்ட இறுதித் தினமான நேற்று மாத்திரம் சுமார் 157 பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர். இவர்கள் பயங்கரவாதிகளின் இயக்கத்தில் உள்ள தீவிரவாதிகளாக இருக்கலாமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த மூன்று நாட்களிலும் சரணடைந்த பயங்கரவாதிகள், அவர்கள் சரணடைந்த மாவட்டங்களில் விசாரிக்கப்பட்ட பின்ரி புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

நேற்று நாட்டின் எந்தப் பகுதியிலும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் இடம்பெறவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. பொலநறுவை மாவட்டத்தில் வித்தியாலயம் ஒன்றைத் தடுப்புக்காவல் முகாமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோட்டை, வியாழன்

தெகிவளை கல்கிசை மாநகரசபையின் முதல்வராக இன்று சிறீலங்காகதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு அன்ட்றூஸ் பெனான்டோ எட்டு மேலதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆயுர்வேத மருந்துகளை

## வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யத் தடை

கோட்டை, வியாழன்

ஆயுர்வேத வைத்தியத்திற்குத் தேவையான மூலிகைகளைப் பயிரிடுவதற்குச் சுகாதார அமைச்சு முயற்சி எடுத்துவருகிறது. வெளிநாடுகளிலிருந்து ஆயுர்வேத மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்படுவதால் உள்ளூரில் மருந்துகளின் ... தேவையைப் பூர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வெளிநாடுகளிலிருந்து ஆயுர்வேத மருந்து இறக்குமதி நிறுத்தப்படுவதால் 15 லட்சம் ரூபா அந்நியச் செலாவணி சேமிக்கப்படுமென ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## கடத்தலைக் கண்டுபிடிக்க புதிய சாதனம்

சென்னை, ஜூன்,10

விமானப் பிரயாணிகள் தங்களுடன் சட்டத்துக்கு மாறாக கடத்திச் செல்லும் பொருள்களைக் கண்டுபிடிக்கும் புதிய எலக்ரோனிக் சாதனமொன்று சென்னை விமானநிலைய ஓய்வுவிடுதியில் நிறுவப்பட்டுள்ளது.

பிரயாணிகள் தங்களிடம் கடத்தல் பொருட்களை எங்கு மறைத்து வைத்தாலும் மந்து வினாடிகளில் இச்சாதனம் கண்டுபிடித்துவிடுமாம்

புதிய அரசியலமைப்பு

## 10 ஆண்டுகளில் தூக்கி எறியப்பட்டுவிடும்'

### துரைரத்தினம் எச்சரிக்கை

ஐந்தாவது அடிப்படைத் தீர்மானம் மீது அரசியல் நிர்ணயசபையில் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த திருத்தப் பிரேரணை தோல்வியடைந்தது. இந்தத் திருத்தத்துக்கு எதிராக யுஎன்பி அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தது.

தாய்மொழி மூலம் கல்வி, பிரஜாவுரிமை போன்றது தொடர்பாக இத்திருத்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

"புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நிரந்தரமானது; தற்காலிகமாகக் கருதி நாங்கள் சொல்வதை கவனிக்காது நிறைவேற்றினால், பத்தோ, பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மாற்றம் ஏற்படும் போது இந்த அரசியல் அமைப்பு தூக்கி எறியப்பட்டுவிடும் என்பதை இப்போதே கூறிக்கொள்ள விரும்புகிறேன்" என்று பருத்தித்துறை எம்.பி. திரு.க துரைரத்தினம் திருத்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருப்பது உண்மைதான் ஆனால் தாய்மொழி மூலம் கல்வி என்ற விடயத்திலும் மற்றும் சில விஷயங்களிலும் கருத்து வேறுபாடு இல்லை தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சமமான கல்வி வசதி அளிக்கப்படவேண்டு என்ற எமது கொள்கையை பேகம்யூனிஸ்ட்டுகளும் சமசமாஜக்கட்சியினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறினார்.

திரு எஸ் வி செல்வநாயகம் திரு கே ஜெயக்கொடி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை திரு நேமிநாதன் ஆகியோர்களும் பேசினர்.

## யாழ்ப்பாணம் தேர்தல் வழக்கு அப்பீல் 8-ந் திகதி விசாரணை

கோட்டை, வியாழன்

யாழ்ப்பாணத் தொகுதி தேர்தல் ஆட்சேப அப்பீல் விசாரணை ஜூலை மாதம் 8-ந் திகதி எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத் தொகுதியிலிருந்து திரு. ஸி. எக்ஸ் மார்ட்டின் ஆட்சிமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணைசெய்த தேர்தல் நீதியரசர் அதைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்திருந்தார் இத்தீர்ப்பை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருந்தது.

ஜூலை 8-ந் திகதி பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னான்டோ, நீதியரசர்கள் ஜி பி ஏ சில்வா, ஏ ஸி அலெக்ஸ் ஆகியோர் முன்னிலையில் அப்பீல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நுவரெலியாத் தொகுதி அப்பீல் விசாரணை இம் மாதம் 23-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சகம்
நல்ல நிலைமையில் அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. 3166

விலுப்பூட்டிய 600X16 நான்கு சில்லுடன் கூடிய சக்கரத்திருப்பவுடைய 10'X5 1/2' ட்ரெயிலர் விற்பனைக்குண்டு. 5, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 2492

பாடசாலை மேசைகள், வாங்குகள், நல்ல நிலையிலுள்ள றெமிங்ரன் ஸ்ரான்டெட் தமிழ் தட்டெழுத்து யந்திரம் விற்பனைக்குண்டு. செல்வராஜன், செட்டித்தறை லேன், நெல்லியடி, கரவெட்டி. 3164

## நன்றி நவிலல்

6-6-71-ல் காலமான எனது தந்தையார் கந்தையா சிவகுருநாதன் (முன்னாள் யாழ். ஐக்கிய வியாபார சங்க செக்கர்) அவர்களின் சமச்சடங்கில் பங்குபற்றிய நண்பர்கள் உறவினர்கள் மற்றும் யா. ஐ. வி. ச. ஊழியர்கள், யாழ். ராஜா கோப்பறேசன் ஊழியர்கள் அனைவர்கட்கும் எமது நன்றிக்கடனை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் புத்திரர் சி. புவனேந்திரன் ராஜா கோப்பறேசன், யாழ்ப்பாணம். 3173

### விற்பனைக்கு

அலுமாரி
6' 9" உயரமும், 6' அகலமும், 1' ஆழமும் உடைய நடுன் (Nadune) மர 3 கதவுகளையுடைய அலுமாரி விற்பனைக்குண்டு. பார்வையிடும் இடம் இல: 222 மருத்தித்துறை வீதி, காங்கேசன் துறை. 3174

## பழைய வேலைநேரமே வேண்டும்

கொழும்பு, வியாழன்
நாட்டில் உள்ள அநேக வர்த்தக ஸ்தாபனங்கள் மந்திரிசபை தீர்மானித்துள்ள புதிய வேலைநேரத்தை அனுஷ்டிக்க விரும்பவில்லை எனத் தெரிகிறது.

பழைய வேலை நேரப்படியே மேற்படி ஸ்தாபனங்கள் கடமையாற்ற அனுமதிக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளதாக இலங்கை முதலாளிகள் சம்மேளனத்தின் செயலாளர் திரு விஜேவீரசேகரா தெரிவித்துள்ளார்.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00 5-00
சிவாஜி கணேசனின் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

நாகமஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி
பி. ப. 2-00, 6-00
ஜெமினி—விஜயகுமாரி
நடித்த
பொற்சிலை
தினசரி பி ப 4-30
Paul Mantee, Terry Moore
in
A MAN
CALLED DOGGER

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
எம். ஜி. ஆர்—பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ராஜன் - புஷ்பலதா
நடித்த
சக்கரம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
பி.ப 2-30, 5-30
சிவாஜி—ஜமுனா
நடித்த
நிச்சய தாம்பூலம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 6-30 p.m.
FIVE MILLION
YEARS TO EARTH
காலை 10-30 பி.ப. 2-00
காந்தாராவ்-ராஜசுலோஜனா
நடித்த
பாட்டி சொன்ன கதை
13-6-71 முதல்
சுந்தரராஜன்-லக்ஷ்மி
நாகேஷ்-ரஜினி
நடித்த
நவக்கிரகம்

## 'ஒரு கோடி தந்தி அனுப்புங்கள்'

— கருணாநிதி

தஞ்சாவூர், ஜூன் 10
'மைசூர் மாநிலத்தில் ஏமாவதி அணை கட்டப்பட்டால் தஞ்சை மாவட்டத்தில் வயல்கள் வெடித்துவிடும். வயல்கள் வெடித்தால் தமிழ் மக்களின் வயிறுவாடி, பசி பட்டினி ஏற்படும்'

மேற்கண்டவாறு தமிழ் நாட்டு முதல் அமைச்சர் திரு கருணாநிதி தஞ்சை திலகர் திடலில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தின் போது தெரிவித்தார். மேலும் இவர் தொடர்ந்து பேசுகையில் காவிரி ஆற்றின் குறுக்கே மைசூர் அரசாங்கம் புதிய அணைகட்டுவதை தடுக்க பிரதமர் இந்திரா காந்திக்கு ஒரு கோடி தந்திகள் அனுப்பும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார்.

## இந்தியில் மாற்றம்

புதுடில்லி, ஜூன் 10
இந்திய மந்திரிகளை இந்தியில் அழைப்பது என்ற உத்தரவில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது. தி. மு. கழகம் தெரிவித்த யோசனையை டெல்லி அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இம் மாற்றத்தின்படி பாராளுமன்றக் குறிப்புகளில் டெல்லி மந்திரிகளின் பெயர் முதல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருக்கும். பின் இந்தியில் இவர்களின் பெயர்கள் எழுதப்பட்டு அடைப்புக்குறி இடப்பட்டிருக்கும் எனத் தெரியவந்துள்ளது. இம்முறை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று நம்பப்படுகிறது.

றீகல்— யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
ஜெய்சங்கர் ஜெயலலிதா
நடித்த
யார் நீ?
Daily 6-30 p. m
Ranquel Welch
in
BED AZZLED
(Color-Paramount)

## 4 புதிய பஸ்கள் யாழ் வந்தன

குருநகர், வியாழன்
வடபகுதிக்கு நான்கு புதிய பஸ்வண்டிகள் அனுப்பப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பகுதியில் சேவைக்கு பஸ்கள் போதாதிருப்பதாக இ.போ.ச யாழ் டிப்போ அதிகாரி கே நாகரத்தினம் மேலிடத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நான்கு புதிய பஸ்களும் இங்கு வந்துள்ளன. மேலும் சில பஸ்கள் வடபகுதிக்கு வரவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## அதிபர்கள் குறை

கோட்டை, வியாழன்
இலங்கைப் போக்குவரத்துச் சபை போதிய பஸ்களை சேவைக்கு விடாததால் மாணவர்கள் பலர் உரிய நேரத்தில் பாடசாலைகளுக்கு வந்துசேர முடியாமல் போவதாக கல்லூரி அதிபர்கள் பலர் குறைகூறினர்.

## கரந்தாட்டம் வதிரியில் இன்று சுற்றுப்போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி
வதிரி பொம்பேஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் சரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது. சாமுவேல் ஞாபக வெற்றிக் கேடயத்திற்காக கழக மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் 'ஏ' பிரிவில் வதிரி சனசமூக நிலையம், பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம், நேஞ்சன் விளையாட்டுக் கழகம், இமையாணன் வி. க. 'ஏ', அல்வாய் மனோகரா வி. க. 'ஸி', ஆகிய கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

இமையாணன் வி. க. 'பி', கரணவாய் வள்ளுவர் விளையாட்டுக்கழகம், கரவெட்டி டெல்லா, அல்வாய் யூனியன், வதிரி பி.எஸ்.ஸி. முதலான கோஷ்டிகள் 'பி' பிரிவில் விளையாடுகின்றன.

'ஸி' பிரிவில் வதிரி அம்பாள் விளையாட்டுக்கழகமும், திக்கம் இளைஞர் வி. கழகமும், வள்ளுவர் 'ஸி' வி.கழகமும் கரவெட்டி ஸ்போல் விளையாட்டுக்கழகம் 'ஏ' யும் புலோலி நக்கீரன் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

'டி' பிரிவு ஸ்பேஸ் 'பி', வி. க. கரவெட்டி, லெனின் வி.க. நெல்லியடி, கடரொளி 'பி', வி.க கரவெட்டி, ஸ்ரலின் வி.க. நெல்லியடி, மனோகரா 'ஏ' வி. க. அல்வாய்.

'ஈ' பிரிவு: பொலிகண்டி ஐக்கிய வி. க. 'ஏ' சிவானந்தா வி. க. அல்வாய், அறிவகம் வி. க. புலோலி, மனோகரா 'பி' வி. க. அல்வாய், நவஜீவன்ஸ் வல்வெட்டித்துறை.

## வேடர்படையில் 5000 பேர்

கோட்டை, வியாழன்
காடுகளில் பதுங்கியிருக்கும் பயங்கரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பாதுகாப்புப்படையினருக்கு உதவியாக 5000 பேர் கொண்ட 'வேடர்படை' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

காடுகளில் வாழும் வேடர்களின் காட்டுப்பகுதிகள் பற்றிய முழு விபரங்களும் தெரியும் என்ற காரணத்தினால் அவர்களின் உதவிபெறப்பட்டுள்ளது. மகியங்கனை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எட்வின் விக்கிரமரத்தினவின் ஆலோசனையின் பேரில் இப்படை உருவாக்கப்பட்டுள்ளது. வேடர் சமூகத்தவரிடமிருந்தே இப்படைக்கு ஆட்கள் திரட்டப்படுவார்கள்.

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-15, பி. ப. 2-00, 5-15 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

ஹைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
பார் மகளே பார்

இங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

வாடகைக்கு
கடைக்கட்டிடம் - உடன் கிடைக்கும்
சகல வசதிகளும் கொண்ட விற்பனை நிலையம்; 3-வது கட்டை பலாலிவீதி, கோண்டாவிலில் (இ.போ.ச. டிப்போவிற்கு எதிராக. விரும்புபவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
எஸ். நரசிங்கம் ஜே. பி.
NIKONA SALES
நிகோநா ஏல நிலையம்
1-வது மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

இன்று முதல் ஆரம்பம்!
யாழ். வின்ஸர் திரையில்
தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மாலை 5-00 மணி;
★ ஜெய்சங்கர் ★ பாரதி ★ சுந்தரராஜன்
★ நம்பியார் ★ நாகேஷ்
நடித்த
நில்! கவனி!! காதலி!!!

## கிழக்குப் பாகிஸ்தானில்

# மக்கள் ஆட்சி ஏற்பட்டால்தான் மாமூல் நிலைமை திரும்பும்

## பிரிட்டிஷ் மந்திரி கருத்து



### அகதிகள் நிலைமை பற்றி கோஸிஜின் கவலை

### மேற்கு ஜெர்மன் பிரதமருடன் சுவர்ண்சிங் பேச்சு வார்த்தை



புதுடில்லி ஜூன் 10

கிழக்குப் பாகிஸ்தானில் பொதுஜன ஆட்சி ஏற்படாதவரையில் அங்கு மாமூல் நிலைமை ஏற்படமுடியாது என்று பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகள் அனைவரும் தம் வீடுகளுக்குப் பத்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலைகள் அவசரமாக உருவாக்கப்படவேண்டும் என்று சோவியத் பிரதமர் திரு. அலக்ஸி கோஸிஜின் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

டாக்காவிலுள்ள இந்திய ராஜீய தூதரக சிப்பந்திகளையும் குடும்பங்களையும் பத்திரமாக இந்தியாவுக்குத் திரும்பச்செய்வதற்கு ஐ. நா. பொதுச்செயலாளர் தமது நற்பணிகளைப் பயன்படுத்தவேண்டும் என்று இந்தியா அவரிடம் கேட்டிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் மக்கள் ஆட்சி ஏற்படவேண்டும் இல்லையென்றால் அங்கு அமைதியும் மாமூல் நிலைமையும் ஏற்படவே முடியாது என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு வங்காள நிலைமை குறித்து விவாதிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு வில்சனும் முன்னாள் மந்திரி திருமதி ஹார்ட்டும் காமன்ஸ் சபையில் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து சேர் ஹியூம் பேசினார். இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள அகதிகள் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி இருவரும் அதிருப்தி தெரிவித்தனர்.

பாகிஸ்தான் ராணுவத்தின் கொடுமைகளைச் சகிக்க முடியாமலே கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருமளவில் இந்தியாவுக்குள் வந்து சேர்கிறார்கள் என்று சேர் டக்ளஸ் ஹியூம் சொன்னார். கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமை உலகம் இதுவரை கண்டிராத அதி பயங்கரமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார். அகதிகள் பத்திரமாகத் திரும்புவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்றார்.

பாகிஸ்தான் நிலைமை குறித்து பாரதம் மேற்கொண்டு வரும் பொறுமைக்கு சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் பாராட்டுத் தெரிவித்தார். இப்பகுதியில் இப்பொழுது பதற்றம் நிலவுகின்றது. உடனடியாகப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் அங்கு யுத்தம் ஏற்படக் கூடிய அபாயம் இருந்து வரும் என்றும் அவர் சொன்னார். அகதிகளுக்கு பிரிட்டன் இன்னும் அதிக உதவிகளைச் செய்வதற்குத் தயாராய் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

### கோஸிஜின் கவலை

இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து சோவியத் யூனியன் பெரிதும் கலைகொண்டிருப்பதாக சோவியத் பிரதமர் திரு அலக்ஸி கொஸிஜின் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவுக்குள் பெருவாரியாக வந்து குவிந்துள்ள அகதிகள் அனைவரும் தம் நாட்டுக்குப் பத்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலை உடனடியாக உருவாக்கப்படவேண்டும் என்று திரு கொஸிஜின் வற்புறுத்தியுள்ளார்.

### மேற்கு ஜெர்மனியில் சுவர்ண்சிங்

இந்திய வெளி உறவு அமைச்சர் சர்தார் சுவர்ண் சிங் மாஸ்கோவிலிருந்து பொன்நகர் சென்றடைந்துள்ளார். அங்கு அவர் இன்று மேற்கு ஜெர்மன் பிரதமர் ஹெர் வில்லிபிராண்டையும் வெளிஉறவு அமைச்சர் திரு ஷீலையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

கிழக்கு வங்காள அகதிகள் இந்தியாவுக்குள் வந்து குவிந்துவிட்டதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து மேற்கு ஜெர்மன் தலைவர்களுக்கு சர்தார் சுவர்ண்சிங் எடுத்து விளக்கியிருக்கிறார். மேற்கு ஜெர்மன் மந்திரி சபை வங்கதேச அகதிகளுக்காக அளிக்கும் உதவிகள் பற்றி இன்னமும் தீர்க்கமாக முடிவுசெய்யவில்லை. முதல் கட்டமாக ஒரு கோடி மார்க்குகளை வழங்க மேற்கு ஜெர்மனி முடிவு செய்திருக்கிறது.

### டாக்காவிலுள்ள ராஜீய சிப்பந்திகள்

டாக்காவிலுள்ள பாரதத் துணைத் தூதரகத்தின் ராஜீய சிப்பந்திகளையும் அவர்களது குடும்பங்களையும் இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கு உதவும் வகையில் தமது நற்பணிகளைப் பயன்படுத்துமாறு ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டை பாரதம் கேட்டிருக்கின்றது. ஐ. நா.வில் உள்ள இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு. சமர்சென் இது பற்றி யுதாண்டுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

டாக்காவிலுள்ள இந்திய ராஜீய அதிகாரிகளும் சிப்பந்திகளும், அவர்களின் குடும்பங்களும் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்கள். இது விஷயத்தில் சர்வதேசச் சட்டங்களைப் பாகிஸ்தான் மதிக்கவில்லை. வியன்னா கோட்பாடுகளையும் பாகிஸ்தான் மீறியிருக்கின்றது. இவர்களை விடுவிப்பதற்காக மூன்றாவது நாடுகள் எடுத்த முயற்சிகள் எதுவித பலனையும் தரவில்லை என்று திரு. சமர் சென் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையால் பாரதத்திலுள்ள பாகிஸ்தான் ராஜீய சிப்பந்திகளும் கட்டுத்திட்டங்களுக்குள்ளாக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும் எனவே பாரத ராஜீய சிப்பந்திகளும் அவர்களின் குடும்பங்களும் பத்திரமாக பாரதம் திரும்புவதற்கு உதவிபுரியும்படி இந்தியா யுதாண்டிடம் கேட்டிருக்கின்றது.

\-\-\-\-\-\-

யாழ். நகர்

### வரியிறுப்பாளருக்கு மேயர் வேண்டுகோள்

குருநகர், புதன்

நகரில் நடைபெறும் சட்ட விரோத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு மாநகர வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா வரியிறுப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாநகர நிர்வாகத்தில் நடைபெறும் குடிநீர் விநியோகம் மின்சார விநியோகம் மற்றும் சுகாதார வசதிகள் ஆகிய வற்றில் சிலர் சட்டத்திற்கு மாறாகவும், நிர்வாக ஒழுங்கிற்கு மாறாகவும் நடப்பதாக புகார்கள் கிடைத்துவருகின்றன. இக்குறைகளை நீக்க மாநகர வரியிறுப்பாளர்கள் பூரண ஒத்துழைப்புத்தர வேண்டும். நகரின் நலனையும் வரியிறுப்பாளரின் கஷ்டங்களையும்தீர்க்க வரியிறுப்பாளர்கள் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என மேயர் கேட்டுள்ளார்.

\-\-\-\-\-\-

பஞ்சாயத்து தலைவர்

### காதலியுடன் தற்கொலை

சிவகங்கை, ஜூன்.10

பஞ்சாயத்து தலைவரும் அவர் காதலியும் காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டார்கள். திருப்பத்தூரின் அருகே இச்சம்பவம் நடைபெற்றது. திருப்பத்தூரை அடுத்துள்ள முறையூர் பஞ்சாயத்து தலைவராகிய சுப்பையா அம்பலம் என்னும் இந்நபர் தன் மனைவியின் தங்கை சீதையை காதலித்ததாகவும் திருமணம் செய்வதாக இவர்கள் செய்த முடிவை பெற்றோர்கள் எதிர்த்ததினால் தற்கொலை செய்துகொண்டதாகவும் நம்பப்படுகிறது. மரணவிசாரணையின் போது நஞ்சு அருந்தி தற்கொலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

\-\-\-\-\-\-

### உபதபால் நிலையம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம்மேற்கு குருதலடி பகுதியில் புதிய உபதபாற்கந்தோர் விரைவில் திறக்கப்படவிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கிடையில் உபதபாற்கந்தோர் திறக்கப்படும் என நம்பப்படுகின்றது.

\-\-\-\-\-\-

### இடமாற்றம்

அரியாலை, வியாழன்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வ. முத்துக்குமாரசாமி யாழ். இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

\-\-\-\-\-\-

### புராணப்படிப்பு

சுழிபுரம், வியாழன்

சங்கரத்தை வரத்தை குளவத்தை முருகமூர்த்தி கோவிலில் பெரியபுராணப் படிப்பு வைகாசி விசாகத்தன்று ஆரம்பமானது. பிற்பகல் 3 மணி தொடக்கம் தினமும் படிப்பு நடைபெறுகிறது.

\-\-\-\-\-\-

### இந்த ஆண்டு பென்ஷன் தொகை ரூ. 20 1/2 கோடி

கோட்டை, வியா

இந்த ஆண்டு பென்ஷன் தொகையாகக் கொடுக்க 20 கோடியே ஐம்பது லட்சம் ரூபா அரசாங்கத்துக்குத் தேவைப்படுகிறது. கடந்த ஆண்டு பென்ஷன் தொகை 17 கோடியே 50 லட்சம் ரூபாவாக இருந்தது. 1965-ல் பென்ஷன் தொகை 12 கோடியே 30 லட்சம் ரூபாவாக இருந்தது.

சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் 3,000 பேர் ஓய்வு பெறுகின்றார்கள். 55 வயது ஓய்வுத் திட்டப்படி இந்த நிதிஆண்டில் 15 000 பேர் ஓய்வுபெறுகின்றனர்.

\-\-\-\-\-\-

### யுனெஸ்கோவின் குறிக்கோள்

பாரிஸ், ஜூன்.10

1971ம், 1972ம் ஆண்டுகளுக்குரிய யுனெஸ்கோவின் கல்வித்திட்டங்கள் வாழ்க்கைக்குகந்த கல்வி, பாலுக்கும் கல்வியளித்தல் ஆகிய இரு குறிக்கோள்களையும் அடையத்தக்கதாகவுள்ளன.

யுனெஸ்கோ பிரமுகர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் யுனெஸ்கோவின் கல்வித்திட்டங்கள் பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் குறிப்பிட்டுள்ளதாவது: கல்விமுறைகளை முன்னேற்றுவது குறித்து சர்வதேச நிபுணர்கள் குழுவொன்று ஆய்வு நடாத்தவுள்ளது.

யுனெஸ்கோ உயர் விஞ்ஞானக் கல்விக்கு முக்கியத்துவமளித்து அதை ஊக்குவிக்கவுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கல்விநிலையை இது ஆராய்ந்து அங்கு எந்தவிதமான விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வியையளிக்கலாம் என நிர்ணயித்து இந்நாடுகளின் கம்பியூட்டர் விஞ்ஞானம், உயிரியல், ஆராய்ச்சிக் கல்விக்கு சர்வதேச ஒத்துழைப்பை அளிக்கும்.

யுனெஸ்கோ சமூகநலத் திட்டம் அபிவிருத்தி, மனித உரிமைகள் உலக அமைதி ஆகியவற்றை அளிப்பனவாக அமையும்.

# சோவியத் 'சோயுஸ்' கலங்களின் வரலாறு

மொஸ்கோ, ஜூன் 10
ஆள் அடங்கிய கப்பல்களைக் கொண்டு அண்ட வெளியை ஆராயும் முயற்சியில் "சோயுஸ்" விண்கலங்கள் புதியதோர் கட்டத்தை திரைநீக்கம் செய்துள்ளன.

பலவிதமான ஆராய்ச்சிகளை நடத்தவிருப்பதால் அதற்கு இசைவாக 'சோயுஸ்' விண்கலங்களில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதுடன் வாகமாக இயக்கும் சக்தியும் இணையும் வசதியும் பெற்றுள்ளன. நீண்டகால பிரயாணம் செய்யும் வல்லமையும் சோயுஸின் விசேஷ அம்சமாகும்.

"சோயுஸ்-1" 1967 ஏப்ரலில் செலுத்தப்பட்டது. புதிய விண்கலனை பரிசோதிப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

1968 அக்டோபரில் பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஜார்ஜ் பெரகோவோய் ஓட்டிச் சென்ற "சோயுஸ்—3" ஆளில்லா "சோயுஸ் 2" உடன் இணைந்த சாதனை யாவரும் அறிந்ததே.

1969 ஜனவரியில் விலாடிமிர் ஷட்டலோவ் இயக்கிச் சென்ற 'சோயுஸ்-4'ம், போரிஸ் வொலினோவும், அலக்ஸி எலிஷேவும், எவ்ஜனி குருனோவும் சென்ற சோயுஸ்-5'ம் அண்டவெளியில் சரித்திரத்திலேயே முதலாவது அண்டவெளி சுழல் நிலையம் நிறுவப்பட்டது.

1969 அக்டோபரில் ஒரே நேரத்தில் மூன்று விண்கப்பல்கள் "சோயுஸ்-6", "சோயுஸ்-7" 'சோயுஸ்-8' ஏழு அண்டவெளி வீரர்களை சுமந்து வலம்வந்தன.

1970 ஜூனில் அனுப்பப்பட்ட "சோயுஸ்-9" 424 மணித்தியாலம் அண்டவெளியில் பிரயாணமாகி உலக சாதனையொன்றை நிறுவியது.

1971 ஏப்ரல் 23ந் திகதி செலுத்தப்பட்ட "சோயுஸ்-10" "சல்யூட்" என்ற சுழல் நிலையத்துடன் ஆராய்ச்சிகளை நடத்தியது.

ஆள் அடங்கிய அண்டவெளிப் பிரயாணங்கள் சோவியத் அண்டவெளி வீரர் யூரி ககாரின் "வொஸ்டோக்"இன் 1961 ஏப்ரல் 12ந் திகதி பிரயாணத்துடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது செலுத்தப்பட்டுள்ள 'சல்யூட்' விண்வெளி நிலையத்தில் இருக்கும் மூன்று வீரர்களும் இப்பொழுது விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

---

புராதன சின்னங்களுக்கு

# புத்துயிர் அளிக்கும் புதிய கலைநிகழ்ச்சி

லண்டன், ஜூன். 10
வர்ண விளக்குகளையும் ஒலிப்பதிவுக் கருவிகளையும் கொண்ட 'ஒளியும் ஒலியும்' என்ற புதிய கலை ஒன்று இன்று பிரிட்டனில் பிரசித்தி பெற்று வருகிறது. பிரிட்டனிலுள்ள சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கட்டிடங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றின் வரலாற்றுப் பெருமையையும் கலையழகுடன் மக்களுக்கு உணர்த்துவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட நவீன உத்திதான் இந்த "ஒளியும் ஒலியும்" என்ற இப்புதிய கலை. இப்புராதன கட்டிடங்களையே காட்சி அரங்காக வைத்து அவற்றிற்கு வர்ண ஒளிகளைப் பாய்ச்சி அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை ஒலிப்பதிவுக் கருவிகள் மூலம் தத்ரூபமாக விளக்கிக் கூறும் சுவாரஷ்யமான கலை நிகழ்ச்சி இது.

லண்டன் மாநகரிலிருக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற புனித போல்ஸ் தேவாலயத்தின் வரலாற்றை இந்நவீன உத்தி கொண்டு உயிர்த்தெழச் செய்யும் அற்புத காட்சியை பிரிட்டனுக்கு விஜயம் செய்வோர் இன்று பார்க்கக்கூடியதாக இருக்கிறது

இப்புனித தேவாலயத்தை அமைத்த உலகப் பிரசித்தி பெற்ற கட்டிடக் கலைஞரான ஸேர் கிறிஸ்தோபர் ரென் இக்கட்டிடத்தை அமைக்க முற்பட்ட போது தனக்கு எழுந்த மகிழ்ச்சியையும் தன் கற்பனையைத் தூண்டிய சிந்தனைகளையும் தேவாலயமானது கட்டம் கட்டமாக எழுப்பியபோது தன் மனத்தில் ஏற்பட்ட எழுச்சிகளையும் உணர்ச்சி ததும்பும் குரலில் கூறுவதை இக்கலை நிகழ்ச்சிகளின் போது கேட்கக்கூடியதாக இருக்கிறது 1966ம் ஆண்டு லண்டனில் ஏற்பட்ட பெருந்தீயின் சுவாலைகள் இத்தேவாலயத்தைத் தழுவி எரிந்ததையும், இரண்டாம் உலக யுத்த குண்டுவீச்சின் போது இதற்கு ஏற்பட்ட சேதத்தையும் தத்ரூபமாக எம் கண்முன்னால் கொண்டு நிறுத்துகிறது 'ஒளியும் ஒலியும்' என்னும் இந்நவீன உத்தி.

······

செஞ்சிலுவைச் சங்க உதவி

## எந்நேரமும் கிடைக்கும்

கோண்டை, வியாழன்
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைக்கு எந்நேரமும் உதவிவழங்க தயாராய் இருக்கிறதென்று அதன் தலைவர் கூறியிருக்கிறார் இலங்கைக்கு மருந்துவ உதவி வழங்குவது சம்பந்தமான கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே இவ்விதம் உறுதி கூறினார்.

······

## பௌத்த பாடசாலைக்கு காணிநன்கொடை

பருத்தித்துறை, வியா
பௌத்த பாடசாலையான ஸ்ரீ நாரதமகா வித்தியாலயக் கட்டட விஸ்தரிப்புக்காக கனுவில் சனசமூகநிலையத்தினர் தமக்குச்சொந்தமான இரண்டரைப் பரப்பு நிலத்தை நன்கொடையாகக் கையளித்தனர். வேறுசில தனியாரும் அரசாங்கத்திடம் நஷ்டஈடு பெற்றுக்கொண்டு தமக்குரிய நிலங்களை இப்பாடசாலைக்கு வழங்கியுள்ளனர். இம் மகாவித்தியாலயக் கட்டட விஸ்தரிப்புக்கான அத்திபாரக்கல்லை வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யூ. சி. மகாதந்தில விரைவில் சம்பிரதாயப்படி நாட்டிவைப்பாரென அறியப்படுகிறது

---

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 28-ந் திகதி

(11- 6- 71)

மேஷம்- மக்களால் மகிழ்ச்சி, வளம்நிறைந்த வாழ்வு. புதுமையில் நாட்டம் புதுப் பொலிவுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

ரிஷபம்- சூழ்ச்சிவலை விரிக்கும். மனச்சாட்சியின்படி நடந்துகொள்ளவும். மற்றவர்களை நம்பவேண்டாம். தெய்வநம்பிக்கை நன்று.

மிதுனம்- உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும். உறவினர் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், குடும்பத்தவர்களின் வாழ்க்கையில் இனிமைதவழும்.

கடகம்- ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக் கூடும். வந்துசேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படலாம்.

சிம்மம்- பிதாவழிமூலம் பெருமைதரும் சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும்.

கன்னி- செய்தொழில் மூலம் சிறப்புகள் கிடைக்கும். பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. விளையாட்டுப்போட்டியில் முதலிடத்தைப் பெறுவீர்கள்.

துலாம்- இரக்க சிந்தை மேவிடும் பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரியஇடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு.

விருச்சிகம்- ஏமாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றது. சிறு தவறுதல் பெரியதொடு நெருக்கடியை உருவாக்கலாம். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

தனுசு- குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும், மனதில் அமைதி குன்றும் விஷமிகளின் புனைந்துரைகளால் மனது புண்படும்.

மகரம்- எழுத்தாளருக்கு எழுச்சிமிக்கதினம்; புதிய படைப்புகளுக்கான கருவூலம் கிடைக்கலாம்.

கும்பம்- சிந்தனை அலைகள் சிதறிப்பாயும். எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள். மூத்த சகோதரத்தின் உடல்நிலை பாதிக்கப்படலாம்.

மீனம்- நன்மான வாழ்வுடன் தனமுடைமை சேரும். தாயின் ஆதரவு தவறுமல் கிடைக்கும். முயற்சியைச் முன்னேற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

## தீவுப்பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை எம். பி. நடவடிக்கை

வேலணை, வியாழன்
ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள மகாவித்தியாலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருவது பற்றியும் போதியளவு தளபாடங்களும் கட்டிட வசதியும் இல்லாதிருப்பது பற்றியும் திரு வா. பொ. இரத்தினம் எம். பி. கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருடன் தொடர்பு கொண்டு இக்குறைகளைத் தவிர்க்குமாறு கோரியுள்ளார்.

······

## இருபோட்டிகளிலும் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி
வலி. மேற்கு சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் சில்லாலை சனசமூகநிலையம் இருபோட்டிகளில் வெற்றிபெற்றது:

---

# சீனு ஏவாயுதங்களை பரீட்சிக்கும்

புதுடில்லி, ஜூன் 10
கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவாயுதங்களை சீனு பரீட்சித்துப் பார்க்க உள்ள தீர்மானமானது இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயகரமானதாகும்;

மேற்கண்டவாறு ராஜ்யசபையில் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் திரு வி. சி. சுக்லா தெரிவித்தார். மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது: சீனு இதனை தன்சானியா கடற்கரைப் பகுதியினூடாகவோ அல்லது இந்துசமுத்திரத்தினூடாகவோ அல்லது பசுபிக் சமுத்திரத்தினூடாகவோ பரீட்சித்துப் பார்க்கும் என்பது தெளிவற்றுள்ளது என்றும் இது பற்றிய முடிவு சிலநாட்களில் அல்லது சிலவாரத்தின்பின் தெளிவாகும் எனவும் குறிப்பிட்டார். இது பற்றிய நடவடிக்கையினை மேற்கொள்ளும்போது சீனு ஏனைய உலகநாடுகளினது அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்குமெனவுதான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

---

பாடசாலைகளில்

# தரமதிப்பிடுதல் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்'

— நெடுஞ்செழியன்

சென்னை, ஜூன் 10
பாடசாலைகளில் மாணவர்களது தரத்தின் மதிப்பை மிகக் கடினமான முறையில் மதிப்பிட வேண்டும். என தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் 5 நாள் நடைபெற்ற கல்வித்திட்ட நிர்வாக கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு திரு. நெடுஞ்செழியன் கூறினார்;

அவர் மேலும் இக்கருத்தரங்கில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நாட்டின் இன்றைய நிலையில் பாடசாலைகளில் தரமதிப்பிடுதலை கண்டிப்பாக மேலும் செயல்படுத்த வேண்டும். தரக்குறைவான மாணவர்களுக்கு உயர்கல்வியை அளிக்காது விடுவிடுவதற்கு இது அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்; இவ்வாறு செய்யாததனாலேயே இன்று நாட்டில் பெருமளவிலான பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

விஞ்ஞானக்கல்வி போதிக்க உயர் பதவிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது நிர்வாகத் திறமை, படிப்பிக்கும் ஆற்றல், கல்வித்தரம், அனுபவம், கல்வித்துறையில் ஆராய்ச்சி ஆகியவற்றிலுள்ள தகைமைகளை பார்த்தே நியமிக்க வேண்டும். அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும். இதில் சேவைக்காலத்தை மாத்திரம் கவனிக்கக்கூடாது. நாட்டின் அத்தியாவசிய சேவையான இக்கல்வித்துறையில் தனிப்பட்ட செல்வாக்கையோ அல்லது வேறு எந்தவித மான செல்வாக்கையோ பயன்படுத்தலாகாது.

—

## உற்சவம் முடியுமுன் குருக்கள் மரணம்

அராலி, வியா
ஆலய வருடாந்த உற்சவத்தை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பித்து வைத்த குருக்கள் உற்சவம் முடிவடைவதற்குள் மரணமானார். அராலி துவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத் திருவிழாவை ஆரம்பித்துவைத்த பிரதம குருக்களான பிரம்மஸ்ரீ செ. சிவசாமிக் குருக்களே இவ்விதம் மரணமானவர். மாரடைப்பினால் அவர் மரணமானார். இம்மாதம் 12-ந் திகதி 10-ந் திருவிழாவுடன் பிரஸ்தாப ஆலய உற்சவம் முடிவடைகிறது.

---

## ஜனார்த்தனம் ஈழம் வருகிறார்

பருத்தித்துறை, வியாழன்
பன்மொழிப் புலவர் ஸ்ரீ ம. ஜனார்த்தனம் இவ்வாண்டும் கரவெட்டி நச்சன்தோப்பு விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டுள்ளார். திரு. ஜனார்த்தனம் இம்மாதம் 29-ம் திகதி முதல் தொடர்ந்து பத்து தினங்களிலும் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். இங்கு அவர் தங்கியிருக்கும் காலத்தில் கல்லூரிகளில் உரை நிகழ்த்துவதற்கும் ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

—

## இன்று இறுதிப்போட்டி

சுழிபுரம், வியாழன்
வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவினர் நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெற விருக்கிறது. இப்போட்டியில் வெற்றிபெறும் கழகத்துக்கு காலஞ்சென்ற பி. எம். சங்கரப்பிள்ளை நினைவு வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்படும்

— —

## புதிய அதிபர்

சுழிபுரம், வியாழன்
பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய புதிய அதிபராக திரு. வி. இராஜசுந்தரம் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

சுழிபுரம், வியாழன்
காரைநகர் இந்துக் கல்லூரி உப அதிபராக திரு. இ. சிவகுருநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

—

## 25 கோழிகள் பலி!

பருத்தித்துறை, வியா.
கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஓர் ஆசிரியருக்குச் சொந்தமான சுமார் 25 கோழிகள் ஒரே நேரத்தில் திடீர் மரணமுற்றன. நஞ்சு கலந்து கொடுக்கப்பட்ட உணவை உண்டதன் விளைவாக இறந்தன என நம்பப்படுகிறது. சில நாட்களின் முன்னர் இதே ஆசிரியரின் நாய்ஒன்றும் இவ்விதபரிதாப மரணத்திற்குள்ளானது குறிப்பிடத்தக்கது

## புதிய சமாதான நீதிபதி



யாழ்ப்பாணம், வியா யாழ்ப்பாண மாநகரசபையின் 23-ம் வட்டார உறுப்பினரும் முன்னுள் ஆசிரியருமான திரு. வி. சிவசுப்பிரமணியம் சமாதானநீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி விசேடதர ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் அக்கல்லூரி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இவரது சேவையைப் பாராட்டிய இலங்கை சாரணர் சங்கம் 'நீடித்தகால நற்சேவை விருது' ஒன்றை வழங்கியுள்ளது.

யாழ் மத்தியகல்லூரி பழைய மாணவரான இவர் அக்காலத்தில் மாணவர் மன்றத் தலைவராகவும் கிரிக்கட் கோஷ்டித் தலைவராகவும் உதைபந்தாட்டக் கோஷ்டி உபதலைவராகவும் விளங்கி விசேட விருது பெற்ருர்.

கல்வி, சமய, சமூக சேவைகளில் மிகவும் அக்கறை கொண்ட இவர், தமிழ்க் காங்கிரஸ் வண்ணைக் கிளையின் உபதலைவராகவும் வண்ணை கிழக்கு சனசமூக சேவா நிலையத்தின் போஷகராகவும் யாழ் வரியிறுப்போர் சங்கத்தின் கூட்டுச் செயலாளராகவும் அகில இலங்கை மாநகராட்சி மன்றங்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்து வருவதுடன் யாழ் திருவோண சுக்கிரவார சத்திரத்தின் தர்மகர்த்தாவாகவும் வண்ணை கலட்டி அம்மன் கோவில், கந்தசப்பிள்ளையார் கோவில், கந்தர்மடம் சுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனத்திலும் இருந்து வருகிருர்.

தராதரப்பத்திரமற்ற

# ஆங்கில ஆசிரியர் நியமனம் 16-ந் திகதி?

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாகாணத்தில் தராதரப்பத்திரமற்ற ஆங்கில ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ்ப்பாணம் கல்விக்கந்தோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையாகத் தெரிகிறது.

ஆங்கில ஆசிரியர்களாகவும் மற்றும் விஞ்ஞானம், சித்திரம், தையல் ஆசிரியர்களாகவும் கடமையாற்றத் தகுதியுடையோரிடமிருந்து ஆறு மாதங்களுக்கு முன்னர் அரசாங்கம் விண்ணப்பம் கோரியிருந்ததும் சுமார் லட்சம் பேர் வடபகுதியிலிருந்து விண்ணப்பித்திருந்ததும் தெரிந்ததே. மற்றும் பிரிவுகளுக்கு விண்ணப்பித்தவர்களின் முடிவும் விரைவில் வெளியாகுமெனத் தெரிகிறது.

தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு இம் மாதம் 16-ம் திகதி நியமனம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

காவிரிநீர்ப் பிரச்னை பற்றி ஆலோசிக்க

# அனைத்து கட்சித் தலைவர்களை கருணாநிதி கூட்டுகிருர்

சென்னை, ஜூன். 10 காவிரி நீர் சம்பந்தமாக மைசூர் மாநில அரசுடன் இருந்துவரும் தகராறு பற்றி ஆலோசிப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி தமிழ்நாட்டிலுள்ள சகல கட்சித் தலைவர்களையும் இம்மாதம் 15ம் திகதி ஒரு மகாநாட்டுக்கு வரும்படி அழைத்திருக்கிருர்.

காவிரி நீர்த் தகராறை மத்தியஸ்தர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று தமிழ்நாடு அரசுவிடுத்த கோரிக்கை பற்றி மத்திய அரசு இன்னும் அக்கறை காட்டாமல் இருந்து வருவதாக நிதி திரு கருணாநிதி கவலை தெரிவித்திருக்கிருர்

பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி தமது மைசூர் பயணத்தின்போது இந்தப் பிரச்னைபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று சொல்லியிருந்தும் காவிரியில் அணை கட்டுவதை மைசூர் அரசாங்கம் கைவிடவில்லை. இந்த அணை கட்டப்பட்டுவிட்டால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கும். இம்மாதம் 15ம் திகதி கூட்டப்பட்டுள்ள மாநாட்டில் இந்தப் பிரச்னை பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று திரு கருணாநிதி தெரிவித்தார்.

—

## வரியைக் குறைக்க

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்தில் வீட்டிற்கான மின்சாரவரிகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. வீதி மின்சாரங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.

—

## புதிய ஸ்தானிகர்

கோட்டை, வெள்ளி ஐக்கிய அரபுக் குடியரசின் புதிய ஸ்தானிகராக செனட்டர் ரெஜி பெரேரா நியமிக்கப்படுவார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

தச்சன்தோப்பு கொலை முயற்சிவழக்கு

# "ஒருவர்தான் சுட்டிருக்கிருர் அதற்குச் சாட்சியமில்லை

— நீதியரசர்

## விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி தச்சன்தோப்பு கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் ஐவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சாட்சியமளித்த சின்னத்தம்பி இராசதுரையை, 1-ம் 4ம், 5ம் எதிரிகள் சார்பில் ஆஜரான பாரிஸ்டர் எம் சிவானந்தன் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தபோது. ஜூரிசபையினர் ஏகமனதாக எதிரிகள் சுற்றவாளிகளெனத் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்தார்,

அப்பொழுது நீதியரசர் கூறியதாவது: சுட்டதை யார் கண்டதென்பதற்கு சாட்சிகள் சொல்லப்படவில்லை. உண்மையில் ஒரு ஆள் சுட்டிருக்கிருர். அந்தச் சூட்டினுல் மூவர் காயமடைந்திருக்கிருர்கள், முடிக்குரிய வழக்கறிஞர் யார் சுட்டதென்பதற்கு போதிய சாட்சியம் சமர்ப்பிக்கவில்லை. உங்களை விடுதலை செய்கிறேன். இனிமேல் மிகவும் கவனமாக நடக்கவேண்டும்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில். நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

1-ம், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் பரிஸ்டர் எம் சிவானந்தன், புறக்டர் கே எஸ் முத்துக்குமாரசாமியின் அனுசரணையுடன் ஆஜரானுர் 2-ம் எதிரி சார்பில அட்வக்கேட் ஏ அமிர்தலிங்கம், புறக்டர் என் அருணாசலத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர், 3-ம் எதிரியின் சார்பில் புறக்டர் ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானுர் 1-ம், 4-ம் 5ம் எதிரிகளுக்காக புறக்டர் ஏ விஸ்வநாதனும், 2ம் எதிரிக்காக அட்வக்கேட் வி. நாகராசாவும், 3-ம் எதிரிக்காக புறக்டர் வியோகேஸ்வரனும், அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்டிருந்தனர். முடிக்குரியதரப்பில் அட்வக்கேட் சந்திரசேகரா ஆஜரானுர்.

இவ்வழக்கில் 69ம் ஆண்டு ஜனவரி 25ம் தேதி தச்சன்தோப்பு என்ற இடத்தில் கந்தையா சுப்பிரமணியம், சிதம்பரன் சுப்பிரமணியம், கயிரமுத்து ஸ்ரீநிவாசகம், சிவராசா முத்தையா, சின்னத்தம்பி மாவிங்கம் ஆகியோர்மீது சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் சின்னத்தம்பி இராசதுரையை கொலை செய்ய முயற்சித்ததாகவும், அதே நேரத்தில் அதேஇடத்தில் சண்முகம் தவராசாவை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் சண்முகம் பாக்கியத்தை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், அதே நேரம் அதே இடத்தில் சண்முகம் முத்துமலரை கொலை செய்ய முயற்சித்ததாகவும், அதே இடத்தில் அதேநேரத்தில் கூட்டத்திலுள்ள ஒருவர் சுட்டதாகவும் இதனுல் கொலைக் குற்றத்திற்கானாக வேண்டும் என்று தெரிந்தும் அதே நோக்கத்துடன் சுட்டதாகவும், இதனுல் காயம் விளைவித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் கூட்டத்திலுள்ள ஒருவர் சண்முகம் தவராசாவை சுட்டதாகவும், இதனுல் கொலைக் குற்றத்திற்கானாக வேண்டும் என்று தெரிந்திருந்தும், அதே நோக்கத்துடன் சுட்டதாகவும் இதனுல் காயம் விளைவித்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் கூட்டத்திலுள்ள ஒருவர், சண்முகம் பாக்கியத்தைச் சுட்டதாகவும் இதனுல் கொலைக் குற்றத்திற்கு ஆளாகவேண்டும் என்று தெரிந்திருந்தும், அதே நோக்கத்துடன் சுட்டதாகவும் இதனுல் காயம் விளைவித்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் கூட்டத்திலுள்ள ஒருவர் சண்முகம் முத்துமலரை சுட்டதாகவும் இதனுல் கொலைக் குற்றத்திற்கு ஆளாகவேண்டுமென்று தெரிந்திருந்தும் அதே நோக்கத்துடன் சுட்டதாகவும், இதனுல் காயம் விளைவித்ததாகவும், மொத்தம் 9 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

அசைஸ் விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது

# குடும்பக்கஷ்டத்தால் தாயார் தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி குடும்பக்கஷ்டம் தாங்காமல் 5 பிள்ளைகளின் தாயாரான நீர்வேலியைச்சேர்ந்த சின்னத்தம்பி முத்தம்மா நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ், கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினுர். அப்போது இறந்தவரின் தந்தையான கதிரவேலு கூறியதாவது:-இறந்தவரின் கணவன் சுகவீனமுற்று 6 மாதங்கள் ஆஸ்பத்திரியில் இருந்தார். அவருக்கு உழைப்பில்லை சொத்துக்களை அழித்துவிட்டார். குடும்பத்தில் பணக்கஷ்டம் இருந்தது இதனுல் மகள் வருத்தமடைந்திருந்தார். சம்பவம் நடந்த தினம் 2 மணிபோல் நான் தோட்டத்தால்வந்து மகளைக் கூப்பிட்டேன். காணவில்லை. ஏன் சாப்பாடு சமைக்கவில்லையென்று கேட்டேன்; தான் மருந்து குடித்துவிட்டதாக மகள் கூறிஞர்.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

# பிள்ளைகளை பிரிந்து வாழ்ந்தவர் தற்கொலை

யாழ்ப்பாணம் வெள்ளி மனைவியையிழந்து பிள்ளைகளைப் பிரிந்து சகோதரனுடன் வாழ்ந்துவந்த சிறுப்பிட்டியைச் சேர்ந்த குமாரு நடராசா என்பவர் நச்சுத் திராவகம்அருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் மரணவிசாரணை நடத்திஞர் சகோதரர் வல்லிபுரம் விசாரணையின்போது கூறியதாவது:- இறந்தவர் என்னுடன் வாழ்ந்துவந்தார். இவரது மனைவி இறந்துவிட்டார். 2 பிள்ளைகள் மாமியுடன் இருக்கிருர்கள். அவருக்கு குடிக்கும் வழக்கம் உண்டு. தொய்வினுலும் கஷ்டப்பட்டார்.

நேற்று என் வீட்டில் சாப்பாட்டு நேரம் அவர் வெளியில் போனுர். அதன்பின் வந்து என்னைக்கட்டிப் பிடித்தபடி விழுந்தார்.

விசாரணையில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

—

## புதூர் நாகதம்பிரான் பொங்கல்

ஒட்டுசுட்டான், வியா. வவனியா வடக்குக் காரியாதிகாரிபிரிவிலுள்ள புதூர் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பொங்கல்விழா இம்மாதம் 21-ந் திகதிநடைபெறவிருக்கிறது.

சரவடி, பரவ் குடம் போன்ற நேர்த்திக்கடனைச் செலுத்தும் பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் எதுவித அசெளகரியமும் ஏற்படாவண்ணம் வவனியா மேலதிக அரசாங்க அதிபர்பொங்கல்விழா நடைபெற நடவடிக்கை எடுத்துவருகிருர்.

## இடமாற்றம்

ஒட்டுசுட்டான், வியா ஒட்டுசுட்டான் பகிரங்க வேலைப்பகுதி மேற்பார்வையாளராகக் கடந்த மூன்று வருடங்களாக கடமைபுரிந்த திரு த யோகராசா பளைக்கும் அவிசாவலைப் பகுதியில் கடமையாற்றிய திரு கே சேனதிராசா ஒட்டுசுட்டானுக்கும் இம்மாதம் 1ந்தேதி முதல் இடமாற்றம்பெற்றுள்ளனர்.

0 0 0

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனப் பகுதி பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு கே சண்முகராசா இம்மாதம் முதல் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார் இவரின் இடத்துக்கு திரு ஆர் குமாரசுவாமி பிரதம என்ஜினியராக நியமிக்கப்பட்டுள்ளார்

—

## 'பெண்களும் உழைக்க வேண்டும்'

அம்பன், வியா 'நாட்டின் பொருளாதாரம் பெருக வேண்டுமெனில் பெண்களும் உழைக்கவேண்டும். ஒரு குடும்பத்தில் இருவரும் உழைத்தால்தான் வாழ்க்கைக்குப் போதியதாயிருக்கும் எனவே பெண்களும் உழைப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.'

இவ்வாறு அம்பன் மாதர் முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. ஜெ ஜெ. தேவசகாயம் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டத்திற்கு திருமதி இ. பாக்கியம் தலைமை வகித்தார்.

# கல்விப் புரட்சி

ஆசிரியர்களும் மாணவர்களும் சமுதாயமாகிய பெரிய வகுப்பறைக்குள் வந்து உலகைப் பார்க்க வேண்டும். அங்கு ஏற்படும் கஷ்டங்களை யெல்லாம் தைரியத்தோடு எதிர்த்துச் சமாளிக்கவேண்டும். உற்பத்தித்தொழிலில் இருந்து வேறுபட்டு வெறும் புத்தகப் படிப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட கல்வி நாட்டின் பொருளாதார நிலையை மங்குரோத்தாக்கி விடும். ஏனெனில் கல்வி பெற்ற ஆண், பெண் இருபாலாரும் சரியாயையிற் கவிழ் சாற்றுடிக்குக்கீழ் இருந்து நிர்வாகவேலைகள் செய்யவே விரும்புகிறார்கள்.

நீண்டகால பாடசாலை வாழ்க்கையே மாணவர் குழப்பங்களுக்குக் காரணமாகும். இதனால் மாணவர்கள் இளமையிலேயே வயது வந்தவர்களது சுதந்திரத்தை அனுபவிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள் உலக வாழ்க்கையின் கஷ்டநஷ்டங்கள் ஆகியவற்றைப் பற்றி அறியாதவர்களாகத் தாம் உலகம் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என நினைத்த ஒரு கற்பனையுலகைக் காணவிரும்புகிறார்கள். இதன்காரணமாக இவர்கள் பொறுப்பையேற்கும் காலம் வெகுதாமதமாகிறது.

கல்வியில் பல்வேறு துறைகளும் கூடிய வீட்டு வேலைகளும் ஆதார, சிரேஷ்ட பாடசாலை மாணவர் மனதை வேறு வழியில் திருப்புவதோடு அவர்களது உடல் நிலையையும் மனநிலையையும் பெரிதும் பாதிக்கிறது. பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் தாங்கள் படிப்பிக்கப்போவதை படிப்பிப்பதைப் பற்றி பரஸ்பரம் கலந்துரையாடியோ அல்லது ஆராய்ந்தோ ஒன்றுபட்டோ செய்வதில்லை. இது கல்வியின் அடிப்படைத் துறைகள் பாடசாலையில் படிக்கும்போது மேற்கொண்ட செய்முறைவேலைகள், ஆகியவற்றிற்கு இடையே ஒருமைப் பாடின்மையை ஏற்படுத்தியுள்ளது. போதனையிலிருந்து சாதனை வேறுபடுகிறது. கற்பிக்கும் பாடங்கள் பாடங்கள், மற்றிய நடைமுறைகள் ஆகியவற்றை மணிகளாகக் கொண்டு தொடுத்ததொரு சங்கிலிபோன்றது கல்வி. ஆனால் இன்று தற்போதைய கல்விமுறையின்கீழ் கல்வி இவ்வாறு இல்லை. இவ்வாறு கல்வியமைந்திராததால் இன்று ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனி ஆசிரியர்களைத் தேடவேண்டியுள்ளது. இவர்களுக்குத் தங்கள் தங்கள் துறைகளைவிட மற்றத்துறைகள் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாகவுள்ளனர். ஒன்றுக்கொன்று தொடர்பற்ற இத்தகைய கல்விமுறை ஒருமைப்பாடின்றி பிளவுகள் உள்ளதாகவும் ஆதேவேளையில் வீணை பொருள்விரயத்தைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

அடுத்துப் பரீட்சைகளை நோக்கும்போது இன்று எண்ணற்ற பரீட்சைகளும், கூடியபுள்ளிகளை இப்பரீட்சைகளில் பெறவேண்டுமென்ற வற்புறுத்தலும் ஒரு மாணவனை வலுவிழக்கச்செய்வதோடு அவனின் முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை யாகின்றன. இன்றைய பரீட்சை முறையை நோக்குமிடத்து அது ஒரு விரோதியுடன் நடந்துகொள்வது போன்றேயுள்ளது. மாணவனை எவ்வாறு வீழ்த்தத் தக்கவகையில், அவனைத் திணறவைக்கத்தக்க முறையிலேயே கேள்விகள் கேட்கப்படுகின்றன. இப்பரீட்சையானது ஞாபகசக்தியைப் பரீட்சிப்பதாக அமைகிறதேயன்றி அவனது கிரகித்தற் சக்தியையோ அல்லது அறிவாற்றலையோ பரீட்சிப்பதாக இல்லை.

பரீட்சைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். சுயமாகக் கற்கவும், சொந்தக்கருத்துக்களை உருவாக்கவும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஊக்கமளிக்க வேண்டும். மாணவர்கள் திணறடிக்கத்தக்க வகையில் பரீட்சைகள் தேவையில்லை. சில பாடங்களில் பரீட்சைகளே வைக்கத் தேவையில்லை.

பரீட்சைகள் நடைபெற வேண்டிய இடங்களில் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தலாம். பல பிரிவுவுடைய தேர்வு முறை இதில் மாணவன் தனக்குக் கொடுக்கப்பட்ட பல கேள்விகளில் இருந்து விரும்பிய சில கேள்விகளைத் தெரிவு செய்து பதில் எழுதலாம். அடுத்து தேவையான புத்தகங்களை விரித்து வைத்துக் கொண்டே பதில் எழுதும் முறையையனுசரிக்கலாம். மேலும் எழுத்துமூலமன்றி செய்கைமுறைப் பரீட்சையை மாத்திரமும் மேற்கொள்ளலாம். இந்தப் பரீட்சை முறைகள் யாவும் மாணவர்களுக்குத் தங்கள் அறிவைப் பயன்படுத்தி அறிவுக்குத் தேவையானவற்றைக் கிரகித்தற்குப் பூரண வாய்ப்பையளிக்க வேண்டும். அத்துடன் பாடக் குறிப்புகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

நீங்கள் அறிவைப் பெற வேண்டுமானால் மாற்றத்தை யுருவாக்கி அதை ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவிருக்க வேண்டும். அப்பிளப்பழத்தின் சுவையையறிய விரும்பினால் அதை எடுத்து உண்ணுவதன் மூலம் அதை மாற்றி அதன் சுவையை யேற்றுக் கொள்வதன் மூலமே அறிந்து கொள்ளலாம்.

அடுத்து பழைய காலத்தில் கையாண்ட கல்விமுறை குறிப்பிடத்தக்கது. அதாவது மாணவர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தல் இந்த மாணவர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை மூன்றாவதும் மிகச் சிறந்த முறையுமாகும். இம்முறை கல்வியை உயிருள்ளதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கும் தன்மை வாய்ந்தது.

முதலாவது ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்குப் போதித்தலாகும், இதில் திறமை வாய்ந்த தான் எடுத்துக் கொண்ட பாடங்களில் ஆராய்ச்சி செய்து அறிவை வளர்க்கின்ற ஆசிரியர் ஆசிரிய பாடங்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்கு அப்பாடங்களின் புதிய ஆய்வுகள், போதிக்கும் முறைகள் ஆகியவை பற்றி விளக்கிக் கூறுவார். இதனால் ஆசிரியர்கள் ஏற்கனவே அப்பாடங்களிலுள்ள அறிவோடு மேலும் கூடிய அறிவை அத்துறையில் பெறுகிறார்கள். இரண்டாவது முறை வழமையான ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் முறையாகும். இதில் ஆசிரியர்கள் திறமைசாலிகளான மாணவர்களில் கூடிய கவனம் செலுத்தி அவர்களை கற்ற மாணவர்களுக்குக் கற்பிக்க ஊக்குவிக்க வேண்டும்.

அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாட்டுக்குக் கல்வியில் புரட்சி இன்றியமையாததும் அத்தியாவசியமுமானதொன்றாகும். இப் புரட்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையில் உள்ள மற்றும் ஊழியர்கள், பெற்றோர்கள், பாடசாலையைச் சூழவுள்ள சமூகத்தின் யாவரும் ஈடுபட வேண்டும். இவர்கள் யாவரும் ஒன்றுதிரண்டு அறியாமை, அடிமைத்தனம், வறுமையாகியவற்றில் இருந்து மக்களை விடுவிக்க விடுதலைப் படையொன்றை உருவாக்கிக் கல்விப்புரட்சியில் இறங்க வேண்டும்.

"புரட்சிகரன்"

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் அச்சகத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதி 62-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# றெக்கிளமேசன் திட்டம் புனரமைப்பு செய்யப்படும்

குருநகர், வியாழன்

குருநகர் றெக்கிளமேசன் திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்கான திட்டமொன்றை யாழ்மேயர் திரு அல்பிரட் துரையப்பா செய்து வருகின்றார். இத் திட்டத்தில் மின்சாரதிருத்த வேலைகள் கட்டிட திருத்த வேலைகள் சுகாதார மேற்பார்வை ஆகியவற்றிற்கு றெக்கிளமேசன் பகுதியில் உப அலுவலகமொன்றை அமைக்கவிருப்பதாகவும் மேயர் தெரிவித்துள்ளார். இப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் இல்லங்களில் ஏற்படும் கஷ்டங்களையும் குறைகளையும் இந்த உப அலுவலகத்திலேயே முறையிட்டுத் தீர்த்துக் கொள்வதற்கு வசதியாக இந்த உப அலுவலகம் இயங்கும் எனவும் மேயர் தெரிவித்தார்.

காவேரி நீர் தகராறு

# சட்ட மன்ற அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம்

## கருணாநிதி கூட்டுகிறார்

சென்னை, ஜூன் 10

தமிழ் நாட்டுக்கும், மைசூருக்குமிடையேயான காவேரி நீர் தகராறு பற்றி ஆராய்ந்த இறுதி முடிவு எடுப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இம்மாதம் 15-ம் திகதி சட்டமன்ற அனைத்துக்கட்சித்தலைவர்களின் கூட்டமொன்றை கூட்டவுள்ளார்.

காவேரி ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் அணைகளால் தமிழ்நாடு பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். காவேரி நீர் தகராறு சம்பந்தமாக மத்திய அரசு கவனமெடுக்காமல் இருப்பது குறித்து முதல்வர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய மொழியில் சிங்கள இலக்கியம் பற்றிய நூல்

மாஸ்கோ ஜூன் 10

"இழக்குவை இலக்கியம்" என்ற தொடரில் "சிங்கள இலக்கியம்" என்ற நூலை மாஸ்கோ நவ்கா புத்தகாலயம் வெளியிட்டுள்ளது.

நூலாசிரியரான விளடிமிர் வைகுஸேஸ் பேராதனை சர்வகலாசாலையில் சிங்களம் கற்றவர். இவ்விளம் ஆசிரியர் "சிங்கள மொழி", "சிங்கள - ரஷ்ய அகராதி" என்ற நூல்களின் ஆசிரியருமாவார்.

மேலும் பிரபல நாவலாசிரியர் மார்ட்டின் விக்கிரமசிங்காவின் நாவல்களை ரஷ்யனில் மொழிபெயர்த்துள்ளார்.

"சோவியத் இலக்கியம்" என்ற இலக்கிய மாசிகையில் இவருடைய நூலை விமர்சிக்கும் ஸோயா பெட்ருனிசேஷ்வா வைகுவை, "ஈழத்தின் சோவியத் தேசபக்தர்" என்று வர்ணித்துள்ளார்.

நவீன இலக்கியத்தின் மையமாக மார்ட்டின் விக்கிரமசிங்கா ஆராயப்படுகிறார். விமர்சன யதார்த்த போக்கின் பிதாவாக அவர் கணிக்கப்படுகிறார்.

சிங்கள இலக்கியத்தின் எதிர்காலம் யதார்த்த போக்கில் உள்ளது என்பதாக ஆசிரியர் கூறுகிறார்.

சோவியத்

# நிலவு வாகனம் இயங்குகிறது

மாஸ்கோ, ஜூன் 10

சோவியத் நிலவுவாகனமான லூனா கோட்-1 நடமாட ஆரம்பித்துள்ளது. பூமியிலிருந்து இயக்கப்படும் இவ் வாகனம் இதுவரை ஐந்தரை மைல்கள் கடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழுமாதங்களுக்கு முன்பு இவ் வாகனம் சந்திரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

# தமிழினத்தைச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பிருந்தும் தமிழரசுக் கட்சிக்காரருடைய பேச்சுகளை மிகவும் அவதானமாகக் கவனித்துவந்துள்ளேன். இனந் தெரியாத ஒரு பயம் அவர்களைச் சூழ்ந்துள்ளது என்பதையே அவர்கள் பேச்சுக் காட்டுகிறது. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இனந் தெரியாத ஒரு பயம் இருக்கிறதென்பதை உணர்ந்தே ஐக்கிய முன்னணி அரசு புதிய அரசியலமைப்பில் ஐந்தாவது அடிப்படை தீர்மானத்தைச் சேர்த்துக் கொண்டுள்ளோம். இந்த ஐந்தாவது அடிப்படைத் தீர்மானத்தைக் கௌரவமாகவும், திருப்திகரமாகவும் செயற்படுத்தி நிறைவேற்றி வைப்போமென்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆட்சிக்காலம் முடிவதற்குள் தமிழினத்திற்குள்ள பயத்தை அறவே ஒழித்து விடுவோம் இந்த அடிப்படை தீர்மானம் மூலம் சகலஇனத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும். ஒரு பிரஜைமீது அநீதி விளைவிக்கப்படுகிறது என்று கூறும் பட்சத்தில் சட்டத்தின்முன் வழக்குத் தொடர உரிமை இந்த அடிப்படைத் தீர்மானம் மூலம் வழங்கப்படும்."

5வது அடிப்படைத் தீர்மானம் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறியது.

# ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 10-00 முதல் நாளை காலை 4-00 வரை

# பஸ் வருமுன்னர் டிக்கெட் பெறலாம்

கோட்டை, வியா(ழன்)

ஜனநெருக்கமான பஸ் தரிப்புநிலையங்களில் பிரயாணிகள் பஸ் வருவதற்கு முன்னரே டிக்கட்டுகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒழுங்குகளைச் செய்துள்ளது.

மேற்படி தரிப்பு நிலையங்களில் பஸ் வந்தவுடன் டிக்கட் விநியோகிப்பதால் ஏற்படும் காலதாமதத்தைப் போக்கவே இ. போ. ச. இந் நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

பிரயாணிகள் பஸ்சேவையைத் துரிதப்படுத்த தாங்கள் செல்லுமிடத்திற்கான சரியான கட்டணத்தை உடன் செலுத்திப் பெறத்தக்கவகையில் தயாராய் இருக்கவேண்டுமென இ. போ. ச. பிரயாணிகளுக்கு நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிளிநொச்சி

# கடைவீதி திருத்தப்படும்

கிளிநொச்சி, வியாழன்

கிளிநொச்சி கடைவீதியைச் சிரமதானமூலம் திருத்தும் தீர்மானமொன்றை கிளிநொச்சிப் பட்டினசபை தனது மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றியது. மேலும் ஒவ்வொரு வட்டார அங்கத்தவரும் தமது வட்டாரத்திலிருந்து ஆட்களைச்சேர்த்து இச்சிரமதானத்தை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சிரமதானத்தில் பங்குபற்றவிரும்புவோர் கி. ச. தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றன

குருநகர், வியாழன்

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வந்த தீவுப்பகுதி சனசமூக நிலையங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் கிளித்தட்டு ஆகிய விளையாட்டுக்களுக்கான சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இப் போட்டிகளுக்கான முதல் கேடயங்களை ஊர்காவற்றுறை நேஞ்சன் சனசமூக நிலையம் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம், வேலணை செட்டிபுலம் சனசமூகநிலையம் ஆகியவை பெற்றுள்ளன. காலஞ்சென்ற சுருவில் சிற்றம்பலம், புளியங்கூடல் செல்லத்துரை, சரம்பன் இராசநாயகம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக கொடுக்கப்பட்ட மேற்படி கேடயங்களை வெற்றிபெற்ற நிலையங்களுக்கு தீவுப்பகுதி சரியாதிகாரியின் பாரியார் திருமதி நடராசா பரிசு வழங்கினார்.

# உற்பத்தி

யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் கீரிமலையில் இயங்கிவரும் பனம்பொருள் உற்பத்தி நிலையத்தில் புதுவித வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வெல்லத்தில் சுண்ணாம்புச்சத்துக் குறைவாகவிருப்பதினால் அதிக சுவையுடையதாகவிருப்பதாக கைத்தொழில் அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது. நுங்குநீரை தாராளத்தில் அடைத்து விற்பனை செய்வது பற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.